| பாடம் | தமிழ்மொழி | திகதி | |
|---|---|---|---|

| தலைப்பு | செய்யுளும் மொழியணியும் |
|---|---|
| க.தரம் | 4.5 இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேட்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| உ.தரம் | 4.5.4 நான்காம் ஆண்டுக்கான இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேட்பச் சரியாகப் பயன்படுத்துவர். |

விளக்கம்: https://bit.ly/3hRGDsc
பக்கம் 116-117

**அ. பாடப்பகுதி பக்கம் 116-117 வாசிக்கவும்**

**ஆ. இரட்டைக்கிளவிகளின் பொருள் அறிக.**

**இரட்டைக்கிளவிகளும் பொருளும்**

- **கடுகடு**
  பேச்சில், செயலில் ஒருவர் தன் கோபத்தின் கடுமையை வெளிப்படுத்துதல்.
- **பளபள**
  கண்ணைக் கூசச் செய்யும் ஒளி.
- **சரசர**
  காய்ந்த இலை (சருகு) ஒன்றோடொன்று உரசும் போது அல்லது மிதிபடும் போது உண்டாகும் ஒலி / உரசல் சத்தம்

## நடவடிக்கை 1

இரட்டைக்கிளவிகளைச் சரியான வாக்கியத்துடன் சேர்த்து வாசித்திடுக.

1. மாலதி தோட்டத்தில் நடந்தபோது [ ] வெனும் ஓசை கேட்டது.
2. அம்மா வாங்கிய வெள்ளிப்பாத்திரங்கள் [ ] வென மின்னின.
3. வேலைகளை முறையாகச் செய்யாத பணியாளர்களிடம் முதலாளி [ ] வெனப் பேசிக் கண்டித்தார்.

1. அண்ணனின் திருமணத்திற்காக அம்மா வாங்கி வந்த வெள்ளிப்பாத்திரங்கள் ____________ வென மின்னின.

2. முத்து காலையிலிருந்து யாரிடமும் பேசாமல் அனைவரிடமும் ______________ வென இருக்கிறார்.

3. தன் பேச்சைக் கேட்காமல் கூடாத நண்பர்களுடன் வெளியே சென்று திரும்பிய சரவணனைக் கண்டதும் அவன் தந்தை ____________ வென இருந்தார்.

4. அரசர் போரின் போது __________ வென மின்னிய வாளைப் பயன்படுத்திச் சண்டையிட்டார்.

LIVEWORKSHEETS